# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2009 - 2010

## தமிழ்மொழி - ஆண்டு 5

சுட்டெண்:............................................................ நேரம்: 120 நிமிடங்கள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை ___216___.
   (18, 247, 216)

2. தமிழர்களினது ஆடற்கலையான கூத்து இழப்பதற்குக் கரணியமானவர்?
   ___ஆரியர்___
   (பாணர், திராவிடர், ஆரியர்)

3. பால்+குடம் என்பதை புணர்த்தினால் வருவது ___பாற்குடம்___.
   (பால்க்குடம், பால்குடம், பாற்குடம்)

4. தஞ்சைப் பெருங்கோவில் கோபுர அடுக்குகளில் செதுக்கப்பட்ட சிவனின் கூத்துகளின் எண்ணிக்கை? ___108___.

   (108, 118, 1008)

5. தஞ்சைப் பெருங்கோவில் கருவறையில் உள்ளது ___சிவலிங்கம்___.
   (விடை, சிவலிங்கம், கோபுரம்)

6. புள்ளினங்கள் என்ற சொல் குறித்து நிற்பது ___நீர்ப்பறவைகள்___.
   (நீர்ப்பறவைகள், விலங்குகள், ஆவினங்கள்)

7. அறநூல்களிலே சிறந்ததாகக் கூறப்படும் திருக்குறளின் மறு பெயர்களில் ஒன்று
   ___பொதுமறை___.
   (முத்தமிழ், பொதுமறை, நன்னூல் )

8. பொங்கலன்று வைகறையில் நீராடிப் புத்தாடை புனைவர். இங்கு புனைவர் என்பது அணிவர்.

(போடுவர், அணிவர், மாட்டுவர்)

9. சோமசுந்தரப் புலவரால் பாடப்பட்ட பாடல்களில் ஒன்று பவளக்கொடி.
(அவர்கள் தந்தமரம், பவளக்கொடி, ஆத்திசூடி)

10. கூத்து எனும் ஆடற்கலையைப்பற்றிக் கூறும் நூல் சிலப்பதிகாரம்.
(சிலப்பதிகாரம், கொன்றைவேந்தன், ஆத்திசூடி)

11. எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் என்ற செய்யுளைப் பாடியவர்

இளங்கோவடிகள்.

(சின்னத்தம்பிப் புலவர், இளங்கோவடிகள், திருவள்ளுவர்)

12. நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்? இந்தச் சொல்லியத்தில் மறைந்திருக்கும் சொல். (அவர்கள், நீங்கள், அவன்)

13. கள்வன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்.
(கண்ணும் கருத்துமாக, அக்கம் பக்கமாக, கையும் மெய்யுமாக)

14. முன்னாளில் காளை உழவுக்குப் பயன்பட்டது.
(காளை, காலை, காழை)

15. அணில் மரத்தில் இருக்கிறது. அணில் பழத்தைக் கொறிக்கிறது. இவற்றைத் தொடர்ச் சொல்லியமாக மாற்றினால் வருவது. அணில் மரத்தில் இருந்து பழத்தைக் கொறிக்கிறது.
(அணில் மரத்தில் இருந்து அணில் பழத்தைக் கொறிக்கிறது,
அணில் மரத்தில் இருந்து கொண்டே பழத்தைக் கொறிக்கிறது,
அணில் மரத்தில் இருந்து பழத்தைக் கொறிக்கிறது)

16. முன்னாளில் ஆடலுக்கென இருந்த குலப் பெண்களை விறலியர் என்று அழைப்பர்.
(விறலியர், பாணர், கூத்தர் )

17. உறவினரை அணைத்து வாழ்தலை சுற்றந்தழால் என்பர்.
(அன்பு காட்டுதல், சுற்றந்தழால், கட்டியணைத்தல்)

18. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் வருவது எண்பது.
(என்பது, எண்பத்து, எண்பது)

19. சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள்.
( திருவள்ளுவர், சீத்தலைசாத்தனார், இளங்கோவடிகள்)

20. பூம்புகாரின் பொற்றொடி எனப்படுபவர் மாதவி.
(கண்ணகி, மாதவி, மணிமேகலை)

21. 'நான்கு காளைகள்' என்ற பாடத்திலிருந்து நீர் அறிந்து கொண்டது
ஒற்றுமையே வலிமை.

(ஒற்றுமையாக வாழக்கூடாது , பிரிந்து வாழவேண்டும், ஒற்றுமையே வலிமை)

22. தைப்பொங்கலின் மறு பெயர்களில் ஒன்று உழவர் திருநாள்.
(பட்டிப்பொங்கல், நவராத்திரி, உழவர்திருநாள்)

23. கூலங்களில் ஒன்று வரகு. (பால், வரகு, தயிர்)

24. மமதை என்ற சொல்லின் கருத்து செருக்கு. (செருக்கு, வீரம், அச்சம்)

25. விலங்குத் தோலினால் செய்யப்படும் இசைக் கருவிகளை தோற்கருவிகள்
என்றும் அழைப்பர். (நரம்புக்கருவிகள், தோற்கருவிகள், துளைக்கருவிகள்)

26. குன்றுகளைச் செதுக்கி சிற்பக்காடாக்கியவன் நரசிம்மபல்லவன்.
(செங்குட்டுவன், நரசிம்மபல்லவன், பாரி)

27. கன்னியா வெந்நீர் ஊற்று உள்ள இடம் திருகோணமலை
(திருகோணமலை, அநுராதபுரம், யாழ்ப்பாணம்)

28. தமிழர் வணிகம் பற்றிக் கூறும் நூல் சிலப்பதிகாரம்.
(திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம்)

29. ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு பொருட்களை அனுப்புவது ஏற்றுமதி.
( இறக்குமதி, ஏற்றுமதி, ஏற்றியிறக்குமதி )

30. திருஞானசம்பந்தரினால் பாடப் பெற்ற சிவாலயங்களில் ஒன்று திருக்கேதீச்சரம்
( திருக்கேதீச்சரம், கோணேச்சுரம், கதிர்காமம் )

(புள்ளிகள் 30)

## 2) பொருத்தமான சொற்றொடரைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

| கண்ணும் கருத்துமாக | தோள் கொடுப்போரே | அல்லும் பகலும் |
|---|---|---|
| திரள்திரளாகச் | காலங்காலமாக | |

1. வளவன் தன் குடும்பத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தான்.

2. புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர் தமது பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

3. எமது பண்பாட்டில் கதை கூறும் வழக்கம் காலங்காலமாக நிலவுகிறது.

4. முத்தமிழ் விழாவிற்கு மக்கள் திரள்திரளாகச் சென்றனர்.

5. ஒருவரோடு இன்பத்திலும் துன்பத்திலும் தோள் கொடுப்போரே உண்மையான நண்பராவர்.

(புள்ளிகள் 05)

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

மிகப் பழங்காலந் தொட்டு தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வந்த இசைக் கருவிகளில் யாழ் முதன்மையானது. நரம்புக்கருவி வகையைச் சேர்ந்தது. வில்லில் நாணை ஏற்றி அம்பு எய்த போது இசையொலி எழுந்தது. அதனைக் கண்டு வில்லின் வடிவில் யாழைப் படைத்தனர். யாழின் வழி பிற்காலத்தில் வீணை போன்ற இசைக்கருவிகளை உருவாக்கினர். யாழிசை தமிழ் மக்களிடையே பெரிதும் மதிக்கப்பெற்றது. யாழிசைப்பவர் பாணர் என ஒரு குலப்பிரிவாக மதிக்கப்பட்டனர். இலங்கை வேந்தன் இராவணன் தன் கொடியில் வீணையைச் சின்னமாகக் கொண்டிருந்தான். இன்று இசை நிகழ்வுகளின் போது வயலினும் வீணையும் வகிக்கும் இடத்தை அந்நாளில் யாழ் வகித்தது. பழந்தமிழ் இலக்கியங்களில் யாழ் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

1. தமிழர்களுடைய மிகப்பழமை வாய்ந்த இசைக்கருவி எது?

யாழ் தமிழர்களுடைய மிகப்பழமை வாய்ந்த இசைக்கருவி.

2. வீணையைத் தன் கொடியில் முத்திரையாகக் கொண்ட வேந்தன் யார்?

இராவணன் தன் கொடியில் வீணையை சின்னமாகக் கொண்டிருந்தான்.

3. உமக்குத் தெரிந்த வேறு இரு இசைக் கருவிகளைக் கூறுக.

வயலின், மிருதங்கம், நாதஸ்வரம்

4. பழங்கால மக்கள் யாழை எந்த வடிவில் அமைத்தனர்?

பழங்கால மக்கள் வில்லின் வடிவில் யாழை அமைத்தனர்.

5. பாணர் என்று யாரை அழைத்தனர்?

யாழ் இசைப்பவர் பாணர் என அழைக்கப்பட்டனர்.

(புள்ளிகள் 10)

## 4) தரப்பட்டுள்ள சொல்லியங்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. மாறன் எனது பள்ளி நண்பன்.

Maran is my school friend.

2. அவன் ஒரு கிளி வளர்க்கிறான்.

He has a pet parrot

3. அது தமிழ் பேசும். அது பச்சை நிறம்.

It talks in Tamil. It is green in colour.

4. மாறனும் நானும் ஒரே பள்ளியில் படிக்கின்றோம்.

Maran and me study in the same school.

5. மாலையில் நாங்கள் ஒன்றாக விளையாடுவோம்.

We play together in the evening.

(புள்ளிகள் 10)

5) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| புள்ளினங்கள் | பொய்கை | அத்தகையோர் |
| வற்றி | காய்ந்து | |

ஓர் அழகான பொய்கை. கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் அதனுள் மலர்ந்திருந்தன. இன்னும் பல நீர்ப்பூக்கள் நீரை மூடி வளர்ந்திருந்தன. பொய்கையைச் சூழ, மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகளில் கொக்கு, நாரை, மீன் கொத்தி, நீர்க்காகம் போன்ற புள்ளினங்கள் வாழ்ந்தன. அவற்றுக்கு வேண்டிய மீன்கள் பொய்கையில் கிடைத்தன. ஒரு முறை பருவ மழை பொய்த்தது. கோடை காலம் வந்தது. மாரிமழை பெய்யாததால் கோடையில் வெப்பம் அதிகரித்தது. நீர் நிலைகள் வற்றின. புற்றரைகளும் செடி கொடிகளும் கருகிப் போயின. குளமும் வற்றிப் போயிற்று. மரங்களில் வாழ்ந்த புள்ளினங்கள் அக்குளத்தை விட்டு, வேறு குளங்களை நாடிச் சென்று விட்டன. ஆனால் காய்ந்து வற்றி வறண்டு போய் கிடந்த குளத்தின் மண்ணோடு மண்ணாக, கொட்டியும் ஆம்பலும் நீர்ச் செடிகளும் தாமும் காய்ந்து கிடந்தன. ஒருவன் வளமாக வாழும் போது, எல்லோரும் உறவாடுவர். அவன் வறுமையடைந்து இடர்பட்டால், நீர்ப்பறவைகள் போல் அவனை விட்டு விலகிடுவர். அத்தகையோர் உறவல்லர். நீர்ச் செடிகளைப் போல், ஒருவரோடு இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்பவர்களே உண்மையான உறவினராவர்.

(புள்ளிகள் 10)

6) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கரிய நிறமந்தக் காக்கை - தம்பி
கவனித்துப் பாரதன் போக்கை
உரிய பொழுதந்தக் காலை - எம்மை
எழுப்பும் தொழிலதன் கடமை

அழுக்குப் பொருளதைக் கண்டு - தன்
இனத்தை அழைத்தே உண்டு
முழுமை பெறுகிற பறவை- தம்பி
முன்னின்று பாரதன் உறவை

மாலை மனைபுகு முன்னே - நாளும்
மகிழ்ந்து குளித்திட்ட பின்னே
சோலை குலுங்கிடப் பாடி - தம்பி
சேர்ந்து பறந்திடும் கூடி

1. எவ்வேளையில் காக்கை குளித்து மகிழ்கிறது?

காக்கை மாலை வேளையில் குளித்து மகிழ்கிறது.

2. காக்கையின் தொழில் என்ன?

காக்கையின் தொழில் காலையில் எம்மை எழுப்புவது.

3. எதைக் கவனிக்கச் சொல்கிறார் கவிஞர்?

கவிஞர் காக்கையின் போக்கைக் கவனிக்கச் சொல்கிறார்.

4. காக்கை பாடும்போது நிகழ்வதென்ன?

காக்கை பாடும் போது சேர்ந்து பறக்கும்.

5. காக்கை எச்செயற்பாட்டினால் முழுமை அடைகிறது?

காக்கை தன் இனத்தை அழைத்து உண்பதால் முழுமை அடைகின்றது.

(புள்ளிகள் 10)

**7. பாடநூல் வினா - ஏழினுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் முழுவிடை தருக.**

1. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' இதன் பொருளைத் தருக?

2. நல்லோர் நட்பு எத்தகையது?

   நல்லோர் நட்பு பழகப் பழக மனதுக்கு இனிமை தரும்.

3. பட்டிப்பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?

4. கதிரவனின் மறு பெயர்கள் இரண்டைக் கூறுக.

   சூரியன், ஆதவன்

5. தஞ்சைப் பெரியகோவில் யாரால் கட்டப்பட்டது?

   தஞ்சைப் பெரிய இராசராசசோழனால் கட்டப்பட்டது.

6. பழந்தமிழர்கள் வணிகம் செய்த நாடுகள் எவை?

   பழந்தமிழர்கள் வணிகம் செய்த நாடுகளாவன :- எகிப்து கிரேக்கம், உரோமம், சீனம், பாபிலோன் : அரேபியா

7. ஒருவரை இன்னாரென அடையாளம் காட்டுவது யாது?

   ஒருவரை இன்னாரென அடையாளம் காட்டுவது மொழி.

(புள்ளிகள் 10)

8) **தரப்பட்ட தலைப்புகளிலிருந்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரையொன்று எழுதுக.**

**1. தமிழர் தொல் வணிகம்**

ஏற்றுமதி இறக்குமதி
பரதவர்
இங்கு பயன்படுத்திய நீருந்துகள்
ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருட்கள்
வணிகம் செய்த நாடுகள்
இது பற்றிக் கூறும் நூல்கள்

**அல்லது**

**2. பாடநூலிலுள்ள 'நான்கு காளைகள்' பற்றிய கதையை எழுதுக**

**அல்லது**

**3. எனது குடும்பம்**

எனது குடும்பம் பற்றி அறிமுகம்
இயல்புகள் (விருப்பு, வெறுப்பு, கல்வி)
நாம் விரும்புபவர் (ஆசிரியர், நண்பர், அயலவர்)
விரும்பும் தொழில்
பொழுது போக்குகள்
எமது இனத்துடனான தொடர்பு

(புள்ளிகள் 15)